## பாடம்-14

### கர்த்தர் ஏற்றுக்கொள்ளும் ஆராதனை

ஒருவன் இரட்சிக்கப்படும்போது கர்த்தர் அவனை சபையில் சேர்த்துக் கொள்ளுகின்றார். இன்று காணப்படும் பல சபையில், கர்த்தருடைய சபை எது? என்று கண்டறிவதற்கு இந்த சபைகளெல்லாம் செய்துவரும் ஆராதனை முறைமையை காணவேண்டியது அவசியாமாகும். புதிய ஏற்பாட்டில் காணப்படும் சபையார் செய்து வந்த ஆராதனையை இன்று செய்யாத எந்த சபையும், கர்த்தருடைய சபை அல்ல. இரட்சிக்கப்படுகின்ற ஒருவன் கர்த்தருடைய சபையில் ஆராதனை செய்ய வேண்டுவது மிகவும் அவசியாமாகும்.

### ஜெபம்

ஆதி சபையினர் கர்த்தரை எப்படி ஆராதித்து வந்தனார்? ஜெபம் என்பது ஆராதனையின் ஒரு பகுதியாகும். இயேசுவின் சபையார் ஜெபித்தனர் என்பதை அப் 2:42; 4:23-31 ஆகிய வசனங்கள் நிரூபிக்கின்றன.

### கர்த்தருடைய பந்தி

ஆதிசபையினர் வாரத்தின் முதல்நாள்தோறும் ஆராதித்து வந்த போது கர்த்தருடைய பந்தியிலும் பங்கு பெற்றனர், (அப் 20:7) வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று சீஷர்கள் அப்பம்மிட்டனர் என்று அப் 20:7-ல் சொல்லப்பட்டு உள்ளது. ஆயைால் புதிய ஏற்பாட்டு சபையினர் வாரத்தின் முதல் நாள்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்றனர். இன்று மனிதர்கள் ஆரம்பித்த சபைகளை சார்ந்தவர்கள் வாரத்தின் முதல் நாளுக்கு பதிலாக வாரத்தின் இடைநாட்களிலும், சிலர் ஆண்டுக்கொருமுறை கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகின்றனர். இந்த ஒரு செய்கையைக் கொண்டு கர்த்தருடைய சபைக்கும், மனித சபைக்குமுள்ள வேறுபாட்டை காணமுடியும்.

### போதித்தல்

ஆதிசபையினர் ஆராதனையின்போது போதிக்கவும் செய்தனர். பவுல் ஒரு ராத்திரி மட்டும் பிரசங்கித்துக் கொண்டிருந்தார் என்று அப் 20:7—ல் சொல்லப்பட்டுள்ளது. ஆராதனையின் போது பிரசங்கம் செய்யப்பட்டது என்பதைக் குறிப்பிடும் இன்னும் பல வசனங்களும் இருக்கின்றன.

### காணிக்கை

ஆதிசபையினர் வாரத்தின் முதல் நாளில் காணிக்கையும் கொடுத்தனர். (1 கொரி 16:1-2) சபையார் விருப்பத்துடன் கொடுத்த காணிக்கையே கர்த்தருடைய ஊழியத்தை செய்து வருவதற்குரிய பணமாக பயன்படுத்தப்பட்டது.

## பாட்டு

ஆதிசபையினர் பாட்டுப்பாடும்போது இசைக்கருவிகளைப் பயன்படுத்தாமல் துதிப்பாடல்களைக் பாடினார். பழைய ஏற்பாட்டில் யூதர்கள் இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர். ஆனால் ஆதிசபையினர் கருவி-இசையைப் பயன்படுத்தியதாக வேதம் எந்த இடத்திலும் கூறுவதில்லை. இன்று மக்கள் ஆராதனையின் போது இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதற்கு வேதத்தில் எந்த ஆதாரமும், அதிகாரமும் கிடையாது. புதிய ஏற்பாட்டில் இசையைக்குறித்துக் கூறும் அனைத்து வசனங்களையும் கீழே தருகிறோம். அவைகளில் ஒருவசனத்தில் கூட கருவிஇசையை குறித்துச் சொல்லப்படவில்லை. அவையாவன : (மத் 2626; மாற்கு 1426; அப் 1625; ரோ 15:9; கொரி 14:15; எபே 5:19; கொ 3:16; எபி 2:12; யாக் 5:13) இன்றுள்ள சபைகள் எவ்வகை இசையைப் பயன்படுத்துகின்றனர் என்பதை வைத்தும் கர்த்தருடைய சபைக்கும் மனித சபைக்குமுள்ள வேறுபாட்டைக் காண முடியும்.